## 90. கர்த்தரோ நல்லவர் அவர்

### பல்லவி

கர்த்தரோ நல்லவர் அவர் கிருபையுள்ளவர்
என்னை காக்கும் தேவன் வல்லவர்

### சரணங்கள்

1. பூமியின் கூடாரம் என்னில் அழிந்து போனாலும்
பரலோக கூடாரத்தை தர வல்லவர்
எனக்காக வாசஸ்தலம் ஒன்றை கட்ட போனவர்
திரும்பி வந்து என்னை அழைத்து செல்வார்
*நான் நம்புவேன்*
*அதற்காய் ஏங்குவேன்*
- கர்த்தரோ

2. இந்த தேவன் என்றென்றைக்கும் உள்ள
எந்நாளும் எனக்கு நல்ல தேவன்
மரணம் வரை என்னை நடத்தி செல்வார்
மரித்த பிறகும் என்னை கூட்டிசெல்வார்
*நான் நம்புவேன்*
*அதற்காய் ஏங்குவேன்*
- கர்த்தரோ

3. வானமும் பூமியும் அழிந்து போனாலும்
உந்தன் வார்த்தை ஒன்றும் அழியாதைய்யா
என்றைக்கும் நிற்கும் உந்தன் வார்த்தையை
நம்புவேன் நம்பி கொண்டே இருந்திடுவேன்
*நான் நம்புவேன்*
*அதற்காய் ஏங்குவேன்*
- கர்த்தரோ